2012 நவம்பர் 1] [திரு. ஞா. செந்தமிழன்]

தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் காலடியில் என் வாழ்நாள் முழுவதும் பணி செய்து கிடப்பதே என் பிறவிப் பயன். மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என்னுடைய சிரம் தாழ்த்தி தலை வணங்கி கோடானுகோடி நன்றிகலந்த வணக்கத்தை உரித்தாக்கி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2012-2013 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் மூன்றாவது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2012 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2012 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்கு செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2012 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்கு செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2012 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்கு செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.